தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பாக தேனி வடக்கு மாவட்டம் உப்பார்பட்டியைச் சேர்ந்த வேல்மணி அவர்களின் குழந்தைகளின் கல்வி உதவித்தொகை ரூபாய் 25000க்கான காசோலையை தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச் செல்வன் எம்.பி. வழங்கினார். உடன் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆஜிப்கான் மற்றும் துணை அமைப்பாளர்கள் பரணி, செல்லத்துரை, தெய்வேந்திரன், ராம்ஜி, ஜெயக்குமார், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் நேற்று முன்தினம் (09/04/2025) தனது தொகுதிக்கு உட்பட்ட ரிஷிவந்தியம் ஊராட்சியில் நடைபெற்று வரும் பல்வேறு பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர் எம்.பெருமாள், ஒன்றிய குழு பெருந்தலைவர் வடிவுக்கரசி சாமி சுப்பிரமணியன் மற்றும் அரசு அதிகாரிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாவட்ட , ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கழக ஆட்சியில்

கோவை தெற்கு தொகுதியில் நடைபெற்று வரும் எண்ணற்ற பணிகள்!

பேரவையில் பா.ஜ.க. உறுப்பினரின் உண்மைக்கு மாறான கூற்றை மறுத்து - அமைச்சர் கே.என்.நேரு புள்ளி விவரங்களுடன் விளக்கம்!

சென்னை, ஏப். 11 -

சட்டப் பேரவையில், நேற்று முன்தினம், மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பா.ஜ.க. உறுப்பினரும் கோவை தெற்கு தொகுதி எம்.எல்.ஏ.வுமான வானதி சீனிவாசன் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்ட உண்மைக்கு மாறாக மறுத்து அமைச்சர் கே.என். நேரு, கோவை தெற்கு தொகுதியில் நடைபெற்று வரும் பணிகளை புள்ளி விவரங்களுடன் பட்டியலிட்டார்.

அமைச்சர் கே.என்.நேரு குறிப்பிட்டதாவது:

உறுப்பினர் வானதி சீனிவாசன் பேசுகிறபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி கோவைக்கு வந்து பல்வேறு திட்டங்களை அறிவிக்கிறார்கள். ஆனால், அந்த அறிவிப்பு, அறிவிப்பு அளவிலேயே இருக்கிறது. எந்தப் பணியும் முன்னேற்றமில்லை என்று சொன்னார்கள். மேலும், multilevel car parking அந்தப் பகுதியிலே கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதையும் வேண்டுமென்று சொன்னார்கள்.

அவருடைய தொகுதியில் மட்டும் 2021 ஆம் ஆண்டு தொடங்கி, இன்று வரை இந்த நான்காண்டு காலத்தில் என்னென்ன பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் சொல்கிறேன்.

பணிகளுடைய விவரம். சாலைப்பணிகள் திட்டம் மொத்தம் எடுத்துக் கொண்ட பணிகள் 1,017. அதற்கான செலவு 8,341 இலட்ச ரூபாய். முடிவுற்ற பணிகள் 935. நடைபெற்றிருக்கின்ற பணிகள் 33. இன்னும் எதிர்ப்பார்க்கின்ற பணிகள் 49.

அதேபோல, சாலைப் பணிகள் பொது நிதியிலிருந்து 60 பணிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. 623 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. முடிவுற்ற பணிகள் 53. நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பணிகள் 7. கட்டடங்கள், 197 கட்டடங்கள் கிட்டத்தட்ட 7,632 இலட்சத்திற்கு 122 பணிகள் முடிவுற்றிருக்கின்றன. 35 பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மழைநீர் வடிகால்கால் 86 இடத்திலே கட்டப்பட்டிருக்கின்றன. 1,648 இலட்சம் ரூபாய். 69 பணிகள் முடிவுற்றிருக்கின்றன. 17 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தூர் வாருதல், மழைநீர் வடிகால் மற்றும் ஓடைகள் 43 பணிகள். 264 இலட்சத்திற்கு எடுக்கப்பட்டிருக்கிறது.

அவற்றில் 40 பணிகள் முடிவுற்றிருக்கின்றன. 3 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நேற்று முன்தினம்கூட, எங்கள் பகுதியிலே பூங்காக்கள் வேண்டுமென்று நீங்கள் கேட்டீர்கள். ரூ.9,639 இலட்சம் மதிப்பீட்டில் 14 பூங்காகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 8 பணிகள் முடிவுற்றிருக்கின்றன. 6 பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தெரு விளக்குகளைப் பொறுத்த வரையில், கிட்டத்தட்ட ரூ.2,101 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டிருக்கின்றன. 2 கோடி ரூபாய் செலவில் தெருவிளக்குகள் மாற்றப்பட்டிருக்கின்றன. குடிநீர் விநியோகம் மற்றும் ஆழ்குழாய் கிணறு பணிகளைப் பொறுத்தவரையில் 110 பணிகள் ரூ.1,577 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 102 பணிகள் முடிவுற்றிருக்கின்றன. 8 பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் 66 பணிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ரூ.6,718 இலட்சம் அளவிற்கு செலவு செய்யப்பட்டிருக்கிறது. அவற்றில் 57 பணிகள் முடிவுற்றிருக்கின்றன. 9 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மற்றவை 159 பணிகள்,

ஆக மொத்தம், எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகள் 1,758, கிட்டத்தட்ட ரூ.350 கோடி 41 இலட்சம் மதிப்பீட்டில் உங்கள் தொகுதியில் மட்டும் இந்த பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

'Multilevel car parking குறித்து சொல்லி இருக்கிறார்கள். அதையும் கவனத்தில் வைத்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு விளக்க மளித்தார்.

நீர், மோர் வழங்கி பொது மக்களுக்கு உதவுங்கள்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி, ஏப். 11 -

கோடை காலம் துவங்கியுள்ள நிலையில் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. எதிர்வரும் நாட்களில் வெயிலின் கடுமை அதிகரிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவிக்கிறது. மேலும் அக்கினி நச்சத்திரம் காலம் போன்று உச்ச நிலையில் வெப்பம் ஏற்பட வாய்புள்ளது.

இத்தகைய நிலையில் மாநிலம் முழுவதும் நீர் மோர் பந்தல் அமைத்து பொது மக்களுக்கு சுகாதாரமான முறையில் குடிநீர் வழங்க வேண்டும் என தி.மு.க தலைவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதியார் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

இதை ஏற்று தூத்துக்குடி தெற்கு மாவட்டம் திருச்செந்தூர், திருவைகுண்டம், ஓட்டப்பிடாரம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் ஒன்றியங்களில் உள்ள முக்கிய பகுதிகளிலும், மாநகராட்சி வார்டுகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் உள்ள மக்கள் அதிகமாக கூடும் இடங்களிலும், பேருந்து நிறுத்தங்களிலும் சுகாதாரமான முறையில் நீர், மோர் பந்தல் அமைத்து மக்களின் தாகத்தை தீர்ப்பதற்கான தொடர் நடவடிக்கைகளை கழக ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளை அமைப்புகளும், சார்பு அணிகளும், கழக முன்னணியினரும் இணைந்து மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

சிவகிரி முரசொலி முகவர் ஜி.எஸ்.எஸ்.நல்லசிவன்

பெரிய தாயார் எஸ்.அருணாசல வடிவு மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

தென்காசி, ஏப். 11 -

தென்காசி வடக்கு மாவட்டம் சிவகிரி முரசொலி முகவரும் மாவட்ட பிரதிநிதியுமான முனைவர். G.S.S.நல்லசிவன் மற்றும் பம்மல் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் எஸ். சுந்தர்ராஜ் ஆகியோர்களின் பெரியதாயார் திருமதி. எஸ். அருணாசலவடிவு 08.04.25 அன்று இரவு 10.50 மணிக்கு இயற்கை எய்தினார்.

'மாவட்ட ஒன்றிய பேரூர் கழக தோழர்கள் அஞ்சலி செலுத்தினர்.

தமிழ்நாடு அரசு சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய 10 –மசோதாவையும் ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டு ஒன்றிய பாஜகவின் கைகூலியாக செயல்பட்ட ஆளுநர் ஆர்.என்.ரவியை எதிர்த்து தமிழ்நாடு அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் ஆளுநரின் செயல்பாட்டை கண்டித்தும் தமிழ்நாடு அரசு அனுப்பிய 10–மசோதாவிற்கும் ஒப்புதல் அளித்தும் உச்சநீதிமன்றம் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியதை தொடர்ந்து திராவிட மாடல் நாயகர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அவர்களின் வழிகாட்டுதலோடு இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் ஆணைக்கினங்க , மண்டபம் மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பாக ஒன்றிய செயலாளர் கே.ஜே. பிரவீன், தலைமையில், பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

கல்வராயன் மலை வட்டம் –

வெள்ளிமலையில் - அரசு 'சுற்றுலா மாளிகை' கட்ட வேண்டும்!

சட்டப்பேரவையில் – தா. உதயசூரியன் வலியுறுத்தல் !

சென்னை, ஏப்.11-

சட்டப்பேரவையில், நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின்போது பேசிய கழக உறுப்பினர் தா. உதயசூரியன், "கல்வராயன் மலை வட்டம் - வெள்ளி மலையில் 'அரசு சுற்றுலா மாளிகை' கட்டித் தாரீர்!" என வேண்டுகோள் விடுத்தார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

தா. உதயசூரியன்:

கல்வராயன் மலை வட்டம், வெள்ளிமலையில் சுற்றுலா மாளிகை கட்ட அரசு முன்வருமா? ஆம் எனில், எப்போது?

அமைச்சர் எ.வ.வேலு: இவ்வாண்டு மானியக் கோரிக்கையில் கல்வராயன் மலை வட்டம், வெள்ளிமலையில் 2.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய ஆய்வு மாளிகை கட்டப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த ஆண்டே அந்த ஆய்வு மாளிகை கட்டப்படும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தா. உதயசூரியன்: திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்று மாநில சுயாட்சி. நாங்களெல்லாம் பள்ளி படிக்கின்ற காலத்தில், (மணியடிக்கப்பெற்றது) மாநில சுயாட்சி என்று சொன்னால், அடைந்தே தீருவோம் என்று சொல்கின்ற வகையில், இன்றைக்கு மாநில சுயாட்சியைப் பெற்றுத் தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் கேட்ட கேள்வி, சுற்றுலா மாளிகை குறித்தது. இப்போது ஆய்வு மாளிகையாக அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், பொதுப் பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டு அறைகள் என்று கேள்விப்பட்டேன். கூடுதலாக இரண்டு அறைகள் கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

அமைச்சர் எ.வ. வேலு: முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி, பொதுப் பணித் துறையின் சார்பில் ஒரு Circuit house கட்டித் தர வேண்டுமென்றுதான் அவர் என்னிடத்தில் கேட்டார். இன்றைக்கு இருக்கிற நிதி நிலைமையை வைத்து, முதலமைச்சர் அவர்களிடம் தனி கவனம் செலுத்தியிருக்கிறோம். ஏனென்றால், இப்போது இருக்கிற நிலையில் பெரும்பான்மையாகக் கொடுப்பதற்கு வாய்ப்பு மிக குறைவு. மக்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்குத்தான் தற்போது நேரம் சரியாக இருக்கிறது. நிதியும் அப்படியே இருக்கிறது.

முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றேன். ஏனென்றால், காடுகளிலும், மலைகளிலும் கழகத்தை வளர்த்தவர், கள்வராயன் மலையின் உச்சிக்கு சென்றவர் என்றெல்லாம் சொல்லித்தான் இந்த அனுமதியைப் பெற்று, ஏற்பாடு செய்திருக்கிறோம். ஒரு Taluk office இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற நீங்கள் செல்லலாம்; மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செல்லலாம்; இருக்கிற அறைகளை பயன்படுத்தினாலே போதும். வருங்காலங்களில் நிதிநிலைக்கேற்ப, முடிந்தால் கூடுதல் அறைகள் கட்டித் தரப்படும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தா. உதயசூரியன்: கரியாலூரில் வனத் துறைக்குச் சொந்தமான ஒரு பயணியர் விடுதியும், 30 கிலோ மீட்டருக்கு பக்கத்தில் இருக்கிற சேராப்பட்டியில் வனத் துறைக்குச் சொந்தமான பயணியர் விடுதியும் இருக்கிறது. அதைத் தான் இவ்வளவு நாட்களாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தோம். அதில், சேராப்பட்டியில் வனத் துறைக்குச் சொந்தமான பயணியர் விடுதி பழுதடைந்திருப்பதால், அதனை பயன்படுத்துவதற்கு வாய்ப்பில்லை. ஆகையால்தான் கூடுதலாக இரண்டு அறைகள் கேட்டேன். அதோடு எங்கள் மாவட்டத்தையொட்டியுள்ள விழுப்புரம், கள்ளக்குறிச்சிக்கிடையே இருக்கின்ற தேசிய நெடுஞ்சாலையில் அரசூர் என்கிற ஊரில் ஏற்கெனவே நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான ஒரு பயணியர் விடுதி பழுதடைந்துள்ளது. சுற்றுச்சுவர் இல்லாமல் இருக்கிறது.

ஆகவே, நெடுஞ்சாலை வழியாகச் செல்கிறபோது, உளுந்தூர்பேட்டை சென்றாலும், திருச்சி, மதுரை போன்ற இடங்களுக்கு செல்கின்றபோது, அங்கே அரசு அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள் தங்குவதற்கு இந்த அரசு விடுதி பயனுள்ளதாக இருக்கும்.

ஃபெஞ்சல் புயல் பாதிக்கப்பட்டபோது, அமைச்சர் அவர்கள், 13 கிராமங்கள் பாதிக்கப்பட்டபோது, பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாகவே வருகை தந்து, அங்கே ஆய்வு செய்து, அந்த மக்களுக்கெல்லாம் உதவி செய்தார்கள். ஆகவே, அவருக்கும் அதுகுறித்து தெரியும். அந்த அரசூர் பயணியர் விடுதியைப் புதுப்பித்துத் தந்து அல்லது புதியதாக கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

அமைச்சர் எ.வ. வேலு: அவர் குறிப்பிட்ட அந்த சேராப்பட்டியில் இருக்கிற விடுதி வனத் துறைக்குச் சொந்தமானது.

வனத் துறை அமைச்சரே என் பக்கத்தில்தான் உட்கார்ந்திருக்கிறார். அவர் பக்கத்திலே நான் தான் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். எனவே, அவரிடத்திலே சொல்லி அதை சீரமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடு இந்த துறையின் சார்பாக நாம் கேட்டுக் கொள்வோம். அதே போன்று அவர் சொன்ன அரசூர் என்பது ஒரு நான்கு மூலை junction உள்ள ஒரு பகுதி. அதை அவரும், நானும் நேரடியாக பார்த்தோம். இந்த நிதி யாண்டிலேயே புதிதாக கட்டுவதற்கு வாய்ப்பு குறைவு. இந்த நிதியாண்டிலேயே அரசூர் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான அந்த ஆய்வு மாளிகைகள் சீர் செய்யப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

திருநெல்வேலி கிழக்கு மாவட்டப் பொறியாளர் அணி

ஒன்றிய, நகர பேரூர்க் கழக நிர்வாகிகள் நேர்காணல்!

மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!

நெல்லை, ஏப். 11 -

நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

நெல்லை மாவட்டக் கழக செயலாளர் இரா. ஆவுடையப்பன் தலைமையில் திருநெல்வேலி கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல் நாளை (12.04.2025 - சனிக்கிழமை) மாலை 04.00 மணி அளவில் மாவட்டக் கழக அலுவலகம் (அம்பாசமுத்திரம் ரோடு ரிலையன்ஸ் பல்க் அருகில்)நடைபெறவுள்ளது.

இதில் பொறியாளர் அணிக்கு திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய/ நகர/ பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு QR CODE மூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் சம்பந்தப்பட்ட ஒன்றிய,நகர,பேரூர் கழக செயலாளர்கள் QR CODE மூலம் விண்ணப்பம் செய்தவர்கள் மட்டும் கலந்து கொள்வதற்கு உரிய ஏற்பாடு செய்து தாங்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அனைத்து மாநகராட்சிகள் பொது ஊழியர்கள் முன்னேற்ற சங்க நிர்வாகிகள்!

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அனைத்து மாநகராட்சிகள் பொது ஊழியர்கள் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். **3410/CNI**, பேரவை இணைப்பு எண்.629) பொதுச்செயலாளராக இருந்த ப.குமார் அவர்கள் மறைவினையடுத்து அச்சங்கத்தின் பணிகள் தொய்வில்லாமல் நடைபெற கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாக அறிவிக்கப்படுகிறார்கள்.

நிர்வாகிகள் பட்டியல்

தலைவர்	- வெ. பாபு மாணிக்கராஜ்
பொதுச்செயலாளர்	- G. சத்தியகுமார்
பொருளாளர்	- D. கன்னியப்பன்

ஏற்கனவே உள்ள நிர்வாகிகள் இணைந்து செயல்படுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கலைஞரகம்
சென்னை - 17
நாள்:10.04.2025

(மு.சண்முகம்,MP)
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை

கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதியார் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, கண்டமங்கலம் மேற்கு ஒன்றியம், மோட்சகுளம் ஊராட்சியில் விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் இரா. ஜனகராஜ், செ.புஷ்பராஜ், வி.ஜி.பிரபாகரன், ஆர்.எஸ்.வாசன், டி.என்.ஜே.சம்பத் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.